ஸ்ரீ: Regd. No. M. 4456.

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி

ஸம்ரக்ஷிணீ

ஸம்புடம் 6] [ஸஞ். 1.

சித்ரபானு தைமீ

1943 ஜனவரி

போஷகர் வருஷ சந்தா ரூ 5—0—0

ஆஜீவ சந்தாதார் ரூ.50—0—0

வருஷச் [மாதப் பத்திரிகை.] சந்தா 2-0-0

ஸம்பாதகர்—பரவஸ்து. ஸ்ரீநிவாஸாசாரியர்

S. No......... சந்தா நெ.........

Sri.

SRI SAMRAKSHINI OFFICE, THILLAISTANAM. B.O.

விஷய அட்டவணை.

1 ஸங்கல்ப ஸூர்யோதயம்		225–230
2 தஞ்சையில் ஸூர்யோதயம்		231–232
3 மருவினியமைந்தன்		233–236
4 நாடகம்		1–5
5 குறிப்புகள் புகழ்மாலை		6
6 அனுபந்தம்: ஸ்ரீதேசிகமணிசதகம் (*தேவநாகரி*)		7–8
7 ஸம்ரக்ஷிணீ [*ராப்பர்*]		2
8 ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய நடிகர்களின் ஸம்மேளனம் & ஸித்திரயம்	[*ராப்பர்*]	3
9 விற்பனைப் புஸ்தகங்கள்	,,	4

ஸ்ரீ ஸம்ரக்ஷிணீ

—o—

நம் ஸம்ரக்ஷிணிக்கு ஆறுவது வயது ஆரம்பமாகிறது. சென்றஷு பாக்கிதார்களுக்கு சென்றஷு கடைசி ஸஞ்சிகை முன்னறிவித்தபடி வி.பி.யிலனுப்பப்பட்டது. ஸுமார் பாதி வி.பி.கள் திரும்பின. விரும்பியவர் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வருஷம் முதல் ஸஞ்சிகையும் பாக்கியுள்ள பாக்கிதார்களுக்கு வி.பி.யிலனுப்பப்படுகின்றன. ரூ $1\frac{1}{2}$ விலையுள்ள ரப்பேப்பர் ரூ $21\frac{1}{2}$ விலையில் வாங்கி அச்சிட்டு எங்கள் சிலவில் அனுப்பியும் வருஷம் முடிந்தும் சந்தா அனுப்பாதவருக்கு முன்னறிவித்தும், வி.பி. அனுப்புவதை மறுப்பவர் மனோபாவத்தின் மஹிமையை மறப்பதற்கில்லை. இவர்களை லட்ஜரில் அடிப்பதுதான் நாம் செய்வது. மீண்டும் ஸம்ரக்ஷிணியை அனுப்பும்படி செய்து மோசம் செய்யாமல் இருக்கும்படி வேண்டுகிறோம். இவர்களின் அக்ரமத்தாலுண்டான தாபத்திற்கு ஸமாதானம் உதார ப்ரமுகர்களின் உசிதமான உபகாரமே. பேப்பர் விலை கடுமையைப்பற்றி ஸம்ரக்ஷிணீ வருஷ சந்தா ரூ 2 ஆக உயர்த்தி இருக்கிறது. சென்ற வருஷத்தில் சிலர் ரூ 2 அனுப்பினார்கள். பலர் இவ்வருஷத்திற்கு ரூ 2 ஆகவேண்டுமென நியமிக்கிறார்கள். நம் ஸம்ரக்ஷிணீ ஸம்ரக்ஷகர்கள் அனைவரும் அங்கீகரிக்க வேண்டுமென வேண்டுகிறோம். முன்பணமனுப்புவது முக்கியமெனவும் மூலதனம் ஸ்ரீதேசிகன் திருவடிகளேயெனவும் ஞாபிக்கிறோம.

(ஸம்-கர்.)

ஸ்ரீ:

"ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ."

(ஓர் மாதப் பத்திரிகை.)

ஜீவநம் ஜகதாம் ஜீயாத் க்ஷிதிவ்யோமதலஸ்தலீ ।
ஸூக்தஜ்ஞம் ஸர்வதந்த்ரஜ்ஞம் வேதாந்தாசார்யம் ஆஶ்ரயே மஹ: ॥

ஸம்புடம். 6 } சித்ரபானு வருஷ தை மீ { ஸஞ்சிகை 1

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

இந்நாடகம் தஞ்சைமா நகரிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸபையாரால் 10-1-43 ல் ஸ்ரீ ஸுதர்சன ஸபை ஸ்ரீமான் இராமநாதஞ் செட்டியார் ஹாலில் நடத்திவைக்கப்படுமென்றும் ஸ்ரீமான் சென்னை மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ தேசிக ரத்னதீபம் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் தலைமை வஹிப்பாரென்றும் 9—1—43ல் ஷை யார் தலைமையில் ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய உத்ஸவமும் உபந்யாஸங்களும் நடைபெறுமென எழுதியிருந்தோம். அதன்படியே தஞ்சையாளியான நீலமேகத்தின் கருணையால் சிறிதும் இடையூறின்றி அவ்வூரில் குறிப்பிட்ட இடங்களிலும் காலங்களிலும் எல்லாம் நன்கு நடைபெற்றன. 9—1—43 சனிக்கிழமை பிற்பகலில் ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார்ஸ்வாமியின் தலைமையில் அவருடைய திருவுள்ளம் போல் விசாலமான தஞ்சை தெற்குராஜவீதி மண்டபம் கட்டிடத்தில், ஸ்ரீ அத்யக்ஷரின் அழகிய முன்னுரையும், ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தான வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமியால் ஷை நாடகத்தி

னுடையவும் ஸ்ரீ தேசிக தர்சனத்தினுடையவும் வைலக்ஷண்யம் நன்கு கூறப்பட்டது. பின்பு மதத்ரயபண்டிதர் ஸ்ரீமான் A.V. கோபாலாச்சாரியர் ஸ்வாமி ஸ்வானுபவத்துடன் நாடகத்தைப்பற்றி உபந்யஸித்தார். வெங்கடாத்திரிஹாரம் வித்வான் ஸ்ரீ-உப அநந்தாசாரியஸ்வாமி நாடகத்தின் அரந்தமான பெருமையைப் பெரிதும் பேசினர். மறுநாள் காலையில் ஸ்ரீ வைஷ்ணவ ஸபை கார்யதரிசி ஸ்ரீமான் K.S. நரஸிம்மய்யங்கார் திருமாளிகையில் பெருமாளுக்கும், ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய ஸ்ரீ கோச (புத்தக)த்திற்கும் திருவாராதனம் நடந்து ஸேவை சாத்துமறை, ஸம்பாவனை, கோஷ்டி விநியோகங்களும் நடந்தன. தில்லஸ்தானம் ஸ்ரீ-உப திரு. திரு. திருமலாச்சாரியர் ஸ்வாமியால் ஸ்ரீ ஸம்ரக்ஷிணிக்காக ரூ 5 ஸம்பாவனை செய்யப்பட்டது. ஸ்ரீ தேசிகன் உருவப்படத்துடன் ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய ஸ்ரீ கோசத்தை சத்திரம், (குடை), சாமரம் வாத்தியங்களுடன் தேசிக பக்தர்கள் ஸ்ரீதேசிகன் எத்ஸரிகை சொல்ல வைதிகர்கள் ஸ்வஸ்தி வாசனம் கோஷிக்க ஷடி வீதியின் மண்டபக் கட்டிடம் எழுந்தருளப்பண்ணி, ஸ்ரீ-உப வித்வான்கள் கமலாபுரம் கோபாலாசார்யர், வடுவூர் ரெங்கனுதாசார்யர், கல்யாணபுரம் வீரராகவாசார்யர், ஸ்ரீகாஞ்சி தாத்தாச்சார்யர், திருக்குடந்தை அத்யாபகர் ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீநிவாஸராகவாசார்யர், உப்பிலியப்பன் ஸன்னிதி ஸ்ரீராம தேசிக சிரோமணி, மாலையில் பரவஸ்து ஸ்ரீநிவாஸதாஸன், நெடுந்தெருஸ்ரீநிவாஸாசார்யர் இவர்களுடைய அரியசிறிய பெரிய உபந்யாஸங்களும் அத்யக்ஷரின் அத்யத்புதமான முடிவுரையும் முடிந்தபின் மாலை 7-மணிக்கு ஸ்ரீ ஸுதர்சனஸபை ஹாலில் நாடகம் நடிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டது. ஷடி அத்யக்ஷர் முதலிய பிரமுகர்களாலும், பல ப்ரபல பண்டிதர்களாலும், இதரர்களாலும் கொட்டகை நிறைந்தது. பல மங்கையர்களும் ஒருபக்கம் அமர்ந்தனர்.

ஸூத்ரதாரர் நடிப்பிரவேசத்திலேயே, நாடக ஆசிரியரின் பெருமையைப் பேசும்போதே ஸபையோர் மனம் கவரப்பட்டது. முதற்காட்சியில் காமன், ரதி வஸந்தன் கலந்துபேசியதும் பாடியதும் ஷேடி தர்பாரில் ஸ்ரீமான் S. T. ஸ்ரீநிவாஸாச்சாரியரின் அழகிய பரத நாட்டியமும், பின் விவேகனும், ஸுமதியும் நம் ஸித்தாந்தத்திலுள்ள ஸூக்ஷ்ம விஷயங்களை வினவிடையாக விளக்கியதும், விசாரணையும் முதிதையும் இனிய கீதத்துடன் வந்து, வரவிருக்கும் விவேகன் வெற்றியை விளக்கிச்சென்றனர். பிறகு ஆசார்ய சிஷ்யர்கள் அனுரூபவேஷத்துடன் வேதாந்த ஸித்தாந்த ஸ்தாபனம் செய்ததும் சிஷ்யரான ஸ்ரீதேசிகனுக்கு விவேகராஜன் விவஸாயனைக்கொண்டு கடகமளித்ததும் பொருத்தமாகவே இருந்தது. பின்பு ராகத்வேஷர்கள் இருவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களும் அபூர்வமான பூர்வபக்ஷங்களும், ஹாஸ்யங்களும் எவர் மனதையும் கொள்ளை கொண்டுவிட்டன. மறுபடியும் ஸுமதி விவேக வ்யவஸாயகர்கள் தோன்றி மஹாமோஹனை ஜெயிப்பதைப்பற்றி நிச்சயம் கொள்வதும் மோஹதூதனை மறுத்தனுப்புவதும், காமனும், வஸந்தனும், லோபனும், த்ருஷ்ணையும் அணிவகுத்துச்சென்று, விவேகனைக் கண்டவுடன் கலவரமுற்று ஓடுவதும் தெளிவைத் தந்தன. டம்பன், வஞ்சனை, அஸூயை, கர்வன் இவர்கள் ஸந்திப்பு மிக்க ஆச்சர்யத்தையும் ஹாஸ்யத்தையும் விளைவித்தது. மஹாமோஹனும் துர்மதியும் தோன்றி டம்பாதிகளை ஏவியது ரௌத்ர ரஸத்தை விளைவித்தது. விவேகன் தர்க்கனுடன் எங்கும் சுற்றிப்பார்த்து கடைசியில் மனமே த்யானத்திற்கு ஏற்ற தபோவனமென்று தேறியது சீரிய சிறிய பெரிய விஷயம். பின்பு விவேகன் ஸம்ஸ்காரனால் தீட்டப்பட்ட சித்திரசாலையில் ஸுமதியோடு வ்யவஸாயனால் காட்டப்பட்ட தசாவதாரங்களை ஸேவிப்பதும் நாரதர் மோஹனிடம் அனுப்பப்பட்ட விவேகதூதனை வதம்செய்ய அவன் உத்தரவிட அதைத் தடுத்ததும்

மோஹன் ஊசிகுத்துமிடமும் கொடுக்கமாட்டேன் என்
றதும் ஸ்ரீமத்ராமாயணத்தையும் ஸ்ரீமஹாபாரதத்தை
யும் ஒருங்கே நினைப்பூட்டின. பின்பு நாரதரும் தும்புரு
வும் விவேகமஹாமோஹ யுத்தத்தை விவரிப்பது, பின்பு
விவேகனுக்கு ஸுமதி விரைந்தோடிவந்து வெற்றிமாலை
சூட்டி வினயத்துடன் வணங்கியதும் விசேஷமாயிருந்தது.
அதன்பின் விஷ்ணுபக்தி பல்லாண்டு பாடிக்கொண்டு
வரவும், கருடன் தோன்றுவதும் ஸங்கல்பன் தோன்றி
விஷ்ணு பக்தியோடு புருஷனைப்பற்றிய ஸல்லாபமும்
சாந்தஸ்வரூபனான புருஷனை ச்ரத்தை ஸமாதானம் செய்
வதும் ஸங்கல்பன் புருஷனை ஸம்ப்ரதாய வ்ருத்திசெய்
யும்படி நியமித்துச் செல்வதும் புருஷன் விவேகனையும்
ஸுமதியையும் ஆசிர்வதித்து நன்றியறிவித்து ஆழ்வார்
போல அர்ச்சிராதி மார்க்கத்தை அநுஸந்திப்பதும் ஆன
பின் 'அங்கீகுர்வந்து' என்ற அந்தத்திலுள்ள ச்லோ
கத்தை அனைவரும் மத்யமாவதியில் பாடியதும் அற்புத
மான நாடகம் அழகாக முடிந்தது. முடிந்தவரை ஸங்கீத
மும் ஸமக்ரமாயிருந்தது. அதில் நடியின் தஞ்சை நீலமே
கத்தைப்பற்றிய தமிழ்ப்பாடலும், ரதி தன் பேச்சுக்களை
அநேகமாய் பாடலில் அமைத்ததும், ஸுமதி ஆழ்வார்
பாசுரங்களை அடிக்கடி அழகாய்ப் பாடியதும், குஹனை
யின் நகைச்சுவை நல்கும் ஸங்கீதமும், நாரதர் ஸ்ரீதேசிக
ஸ்ரீஸூக்திகளையும் தமிழ்க்கீர்த்தனங்களையும் காமன் 'தர
லளித' என்னும் ச்லோகத்தை இசையுடன் இசைத்துப்
பாடியதும், தும்புரு 'பூரய மம காமம், என்ற ஸம்ஸ்க்ருத
கீர்த்தனையைப்பாடியதும், ச்ரத்தை, விஷ்ணுபக்திகளின்
இனிய, உயர்ந்த கீதங்களும் ஸங்கீத ஸங்கிகளின் அந்த
ரங்கத்தை ஸந்தோஷரங்க (நாடகசாலையு) மாகச்செய்து
விட்டது. இத்தேசிகமணியின் நாடகத்தை மணிப்படி
ஆரம்பித்து முடித்த மணியெனும் ரஸிகமணியை மறக்க
முடியாது. இந்நாடகத்தில் பாத்ரங்களாகச் சேர்ந்து
தங்கள் கார்யங்களை விட்டு, இதைச் சிறப்புறச்செய்ய
வேண்டுமென்று வேறுபயனை எதிர்பாராது ஊக்கத்துடன்
உழைத்த நடிகநண்பர் அனைவருக்கும் நமது மனமார்ந்த
நன்றியைச் செலுத்துகிறோம்.

நாடகம் முடிவதற்குமுன் ஸ்ரீமான் ஜட்ஜ், வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் (அக்ராஸனர்) இந்நாடகத்தின் வரலாற்றையும் நடித்ததாலேற்படும் பயனையும் விளக்கி தாம் 55-வருஷங்களாக பலநாடகங்களை நடித்தும் நடத்தியும் விசேஷித்து இந்நாடகத்தை ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் நடத்திவைத்தும் பார்த்துமிருப்பதில் இத்தகைய ஆனந்தத்தை அடைந்ததில்லை என்றார். நடிகர்களின் சொற்பொழிவு கடைசியில் இருப்பவரும் கேட்டு ஆனந்திக்கும்படிக்கும் பண்டிதரும் மற்றவரும் மகிழும்படியும் இந்நாடகம் நடந்ததென்றும் (Interval) இடைநேரம் விடுதலின்றி மாலை 7-மணி முதல் 11½மணி வரை சிறியோர்முதல் பெரியோர்வரை சிறிதும் சப்தமின்றியிருந்த காக்ஷியே இது நன்கு நடந்ததற்குப்போதுமான அத்தாக்ஷியென்றும் ஆங்கிலத்தில் விரிந்த சொற்பொழிவாற்றினார் தஞ்சை ஸ்ரீவைஷ்ணவஸபையின் உபாத்யக்ஷகர் வக்கீல் வழுத்தூர் ஸ்ரீமான் ரங்கஸாமி அய்யங்கார் ஸ்ரீமான் வி.வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் அத்யக்ஷ பதவியை அங்கீகரித்து நடத்திவைத்ததற்கும், நிஷ்காமகைங்கர்யம் செய்த நடிகர்களுக்கும் மற்றுமுதவிய ஸ்ரீமான் மணி அய்யர் முதலானவர்க்கும் நன்றியறிவித்தார் ஷை ஸபையார் ஸ்ரீஸங்கல்பஸூர்யோதய மஹோத்ஸவத்தையும் ஷை நாடகத்தையும் நடத்திவைத்த பொறுப்பை ஓர் பொறுப்பாகவே(மலையாக) நினைக்கிறோம இச்சபையின் அத்யக்ஷர் ரிடையர்டு பாரஸ்டு ஆபீஸர் R நரஸிம்மய்யங்கார், உபாத்யக்ஷர்வழுத்தூர் வக்கீல் ஸ்ரீமான் ரங்கஸாமி அய்யங்கார்அவர்கள் ததீயாராதனத்திற்குப் பொருளைப் பொருட்படுத்தாது உதவியதாகக் கேள்விப்படுகிறோம். ஸ்ரீமான் காரியதரிசி K. S. நரஸிம்மய்யங்கார் ததீயாராதன கைங்கரியத்தையும், ஸ்ரீமான் உபாத்யக்ஷர் ரங்கஸாமி அய்யங்கார் உத்ஸவம், உபந்யாஸங்கள், பண்டித ஸபையின் காரியங்களையும் ஸ்ரீமான்கள் வக்கீல்கள் N. கிருஷ்ணமாசாரியரும், துவார் T. ராகவாசாரியரும், மெயில் ரிபோர்டர் ஸ்ரீமான்பார்த்தஸாரதி அய்யங்காரும் தஞ்சையில் உள்ள பிரமுகர்களை அழைப்பதையும் ஸ்ரீமான்வக்கீல் ஜகத்ரக்ஷக அய்யங்கார் நாடகஸம்மந்தத்தையும் ஏற்றுக்

கொண்டு, தங்கள் சிறப்பையும் சிரமத்தையும் பாராது சிறிய அவகாசத்தில் பெரிய காரியங்களை நடத்திவைத்த தற்கு கிருதக்ஞராக இருக்கிறோம்.

ஸ்ரீமான் K.S. நரஸிம்மய்யங்கார் ஸ்வாமி ஆதிமுதல் இந்நாடகத்தைத் தஞ்சையில் நடத்தவேண்டுமென்று மனோரதித்தார். ஸ்ரீமான் S. T. ஸ்ரீநிவாஸாசாரியர் (கலியாணபுரம்) M A. வித்வான் L.T. தஞ்சையிலேயே நடத்திக்கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீவைஷ்ணவ ஸபையாரை வற்புறுத்தியவர். இவரும் தில்லைஸ்தானம் ஸ்ரீமான் திரு. திரு. T T. கோபாலாசாரியரும், கலியாணபுரம் ஸ்ரீமான் ப்ளீடர் S. ஸ்ரீநிவாஸய்யங்காரும் நாடகத்தில் நடித்ததுமின்றி இதற்குறிய லௌகிக காரியங்களிலும் உதவியர்கள். ஸ்ரீ T.T. கோபாலாசாரியர் நாடகத்தின் முன்செலவுக்குப் பணமும் தந்து உதவியவர். ஸ்ரீரங்கத்திலும், திருக்குடந்தையிலும் இந்நாடகத்தை நடிக்கும்படி பிரபஞ்ச நாடகத்தை ஆட்டிவைக்கும் ஸ்ரீரங்கநாதன் (நாடகசாலைக்கு அதிபன்) அருள் புரிவாராக. ஸமீபத்தில் நடந்த தஞ்சை ஸ்ரீ வைஷ்ணவஸபையில் மங்களாசரணம் சொல்லும்போது ஸ்ரீதேசிகஸ்ரீஸூக்தியில் 'தேவோந: சுபமாதனோது' என்ற ஸ்லாக்யமான பத்யத்தை விளக்கிப் பத்து வேடம் தரித்து பிரபஞ்சபாலன நாடகத்தை நடத்தும் ரங்கபதி இந்நாடகத்தை இச்சபையைக் கொண்டு நடத்திவைக்கவேண்டுமென நாம் வேண்டியதை தலைக்கட்டி வைத்தான். அவ்வரங்கத்தின் தலைவன் என்று இவ்வியாஸத்தைத் தலைக்கட்டுகிறோம். இந்நாடகம் நாடெங்கும் நடக்கும்படி நம்மரங்கன் இரங்குவானாக!!! சென்னையில் ஸ்ரீமான் வக்கில் V K. பார்த்தஸாரதி அய்யங்காரைக்கொண்டு நாடகத்தை தமிழில் சுருக்கி எழுதி சென்னை, வேலூர், மதுரை, ஸ்ரீரங்கம் இவ்விடங்களில் 1938ஹு த்தில் நடத்திவைத்து ஸம்ரக்ஷிணிக்கு உதவி வழிகாட்டிய ராவ்ஸாகிப் கமலாபுரம் ஸ்ரீமான் ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியிடம் கிருதக்ஞராயிருக்கிறோம்.

(ஸம்-கர்.)

தஞ்சையில் ஸங்கல்ப ஸூர்யோதயம்.

(ஸ்ரீ உ.ப. வே. வித்வான் நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசாரியர்.)

ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகன் நமது நன்மைக்காக அருளிச் செய்திருக்கும் கிரந்தங்களில் ஸங்கல்ப ஸூர்யோதயம் என்பது ஓர் நாடகம். இது ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ளது. இதை வெகுகாலத்துக்கு முன்பு ஸ்ரீ தேசிக பக்தி மிகுந்த ஸூரபுரத்தார் என்று ப்ரஸித்தி பெற்ற மகான்கள் அபிநயித்து, காண்பித்ததாய்க்கேள்வி. சென்னை திருவஹீந்திரபுரம் இவ்விடங்களிலும் இது விபவஹூத்தில் நடிக்கப் பட்டது. பார்ப்பவர்களின் ஸௌகர்யத்திற்காகத் தமிழில் இது சுருக்கப்பட்டு இந்நாடகம் அவதரித்த இடமான ஸ்ரீரங்கம் முதலானவிடங்களில் 4 வருஷத்துக்கு முன்பு அழகாய் நடித்து காண்பிக்கப்பட்டது.

ஸ்ரீ தேசிக பக்தியினால் விசிஷ்டமாகிய பரவஸ்து குலத்திலுதித்தவரும் ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணீ பத்திராதிபருமாகிய ஸ்ரீ உ. வே. வித்வான் கீழச்சேரி ஸ்ரீநிவாஸாச்சாரியர் ஸ்வாமி தேசிக பக்தி, ஸதாசார்ய கடாக்ஷம், ஸம்ப்ரதாயஞானம், ராஸிக்யம் உத்ஸாஹம் இவைகள் பொருந்திய சில ஆஸ்திகர்களைக்கொண்டு இவ் வருஷம் இந்நாடகத்தை நடத்த முயன்றார். ஸ்ரீ தேசிகன் கிருபையால் ஸ்ரீ நயினாராசாரியர் ஸ்வாமியால் அர்ச்சாரூபியாய் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ தேசிகன் கடாக்ஷத்துக்கு விஷயமாயுள்ள தஞ்சைமா நகரில் நடத்துவதாய் தீர்மானமும் ஆயிற்று. ஸ்ரீ தேசிக தர்சன ரத்ந தீபம் ஸ்ரீமான் சென்னை வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காராலும், அவருடைய ப்ரபை போன்றவர்களுமான தஞ்சையிலுள்ள சில தேசிக பக்தர்களால் ஆஸ்தையுடன் ஸேவை சாற்றுமுறை, ததீயாராதனம், பண்டிதர்களின் உபந்யாஸம் இவற்றுடன் மஹோத்ஸவமாய் கொண்டாடி நாடகம் நடத்தத் துவக்கப் பட்டது. சிறந்த இடம், நிறைந்த ஜனம், தக்க வெளிச்சம், பக்கவாத்தியம், அழகுவாய்ந்த உடைகள், புகழத்தக்க வேஷங்கள், மகிழத்தக்க மதுரகான நடனங்கள், தெளிவான முறையில் எளிதான நடையில் கேட்போர் மனதில் விஷயங்கள் ஸூலபமாய் பதியும்படிக்கும் அந்தந்த இடங்களில் ‘த்ருநயகூவம் ரஸேஷு’ என்கிறபடி மனம் லயிக்கத்தக்க ரீதியில் ரஸங்கள் ததும்பும்படிக்கும் அமைந்த சொற்பொழிவுகள், இவைகளுடன் அகாலமின்றி ஒரு கலபையன்றி சொல்லொணாத்திறமாய் நாடகம் நடந்தேறியது.

மாக்ஷிமை தங்கிய இக்காக்ஷியைக் கண்டுகளித்த பண்டித பாமர ஜனங்களின் மகிழ்ச்சியை கவனிக்குங்கால் ஸ்ரீ தேசிகன் இந்நாடகத்தில் முன்னுரையில் சாந்தி ரஸமுள்ளதும் ஆத்ம

குணங்களான விவேகம் மகாமோஹம் முதலியவர்களை நடிகர்களாகவும் அமைத்துள்ள இந்தப் புதிய நாடகத்தால் என்ன ரஸம் உண்டாகப் போகிறதென்று ஒரு கேள்வியை எழுப்பி அதற்கு ஸமாதானம் உரைக்கும் முறையில் நாடகத்தில் காண்பிக்கக்கூடாதது ஒன்றுமில்லை. அப்படிக்கு முடியாத சாஸ்திரம் கலைசித்திரம் முதலிய எதுவும் வீணே. மனிதன் ஜன்மமெடுத்தது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் தன்னை விடுவித்துக்கொண்டு பேரானந்தத்தை அடையவே. அதற்காகவே சாஸ்திரம் முதலியன கற்கவேண்டும். கிரந்தம் செய்பவரும் அதைப்போதிக்கவே செய்யவேண்டும். இந்த விஷயம் தெரிந்தவர்களுக்குத் தெரியும். சில பொறாமைக்காரர்கள் அறியாவிடினும் தெய்வத்துக்கு தெரியும். கடைசியாய் அவர்களும் மயிர் கூச்சலெறிந்து தலையசைத்து வைத்த கண் வாங்காமல் இதைக்கண்டு மகிழ்வார்கள் என்று அருளிச் செய்திருக்கிறபடி நாகரீக முயற்சி, ஸங்கீததேர்ச்சி, நாடகப் பயிற்சி முதலியவைகள் முன்னேறி நிற்கும் இந்நாளில் இந் நாடகம் யாருக்கு என்ன ரஸம் அளிக்கப்போகிறது? இதில் என்ன புரியப்போகிறது? இவர்களும் எப்படி நடிக்கப் போகிறார்கள்? என்று ஆதியில் பலவிதமாய் கவலைப் பட்ட சில அபிமானிகளும் அப்படியே வைத்தகண் வாங்காமல் கண்டு மகிழ்ந்ததுடன் இந்நாடகம் பல இடங்களில் பல தடவை நடக்கவேண்டுமென்றும் இந்நாடகம் ஒருவரிடம் வாசித்து கேட்கப்பட்டாலுங்கூடப் புரியாத விஷயங்கள் இப்போது தெரியும்படிக்கிருந்ததென்று கொண்டாடும்படி இருந்தது. பகவான் தன் விஷயத்தில் கொஞ்சம் ப்ரவிர்த்திப் பவர்களையும் 'ஜ்ஞாதி லாலியோஜ' என்று ஞானபிவிர்த்தி செய்து உபகரிப்பான் என்று சொல்லியிருப்பது போல் ஆசார்யர்களும் தன் ஸூக்திகளில் ப்ரவிர்த்திப்பவர்களுக்கு ஞானபிவிர்த்தி செய்து உபகரிப்பார்கள் என்பதற்கு இது உதாஹரணமாகும். லோகத்தில் ராஜ ராஷ்டராபிவிர்த்திக்கும் ஸங்கடங்கள் நிவர்த்திப்பதற்கும் இஷ்ட காமியங்கள் கூடுவதற்கும் தேவோத்ஸவங்கள் ஸ்ரீமத் ராமாயணம் முதலிய புராணபடனங்கள் செய்யப்படுவதுபோல் இந்த தேசிக ஸ்ரீ ஸூக்திகளுக்கு உத்ஸவம் ப்ரவசனம் முதலியவைகள் அங்காங்கு செய்யப்பட்டால் மிகுந்த மங்களமுண்டாகும். கொஞ்சகாலத்துக்கு முன்பு பெருமாள் கோவிலிலும் திருமயிலையிலும், ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம் ஸ்ரீ தயாசதகம் இவைகளின் மகோத்ஸவம் நடந்தது. அப்போது சென்னையிலிருந்த அமளியையும் இப்போதிருக்கும் அமைதியையும் பார்த்தாலே தெரியவரும், ஸ்ரீ அபீதிஸ்தவம் உத்ஸவம் சீக்கிரம் நடந்தால் நல்லது. அல்லது அபீதிஸ்தவம் பாதுகாஸஹஸ்ரம் இவைகள் ஸன்னிதிகளிலும் கிரஹங்களிலும் இடைவிடாது பாராயணம்பண்ணி வந்தால் ரொம்ப க்ஷேமமுண்டாகும்.

மருவினிய மைந்தன்

(S T. ஸ்ரீநிவாஸாசாரியர் M. A, வித்வான் L. T.)

—:O:—

கோடையின் தாபத்தால், வீட்டிற்குள் இருக்கவும் முடியவில்லை. தெருவில் நிலவில் ஓர் கயிற்றுக்கட்டிலில் படுத்திருந்தேன். மனம் என்ன காரணமோ மருளுற்றிருந்தது. நான் தங்கியிருந்த சிறு கிராமத்தில் ஜனங்கள் 8 மணிக்கே வெளியில் குறட்டைவிட்டு உறங்க ஆரம்பித்து விட்டனர். மனத்தை வெருட்டும ஓர் அமைதி. வெகுதூரம் சாலையில் குடிகாரன் யாரோ உரத்துப்பொருந்தாதுபாடும் பாட்டு. கண்ணுக்கெட்டியமட்டும அறுவடையான வயல்கள். வெகுதுலைவில் இருண்ட பொழிற்புறம்! சிறுகிராமத்தில் எனக்குத் துணையிருப்பார் யாருமல்ல. அமைதி! வானில் அசைந்துசென்ற தண்மதியே என்னைத் தன் கிரணங்களால் தடவி உசாவுவான்போல் நின்றனன். மேலே எல்லையற்ற வானம். சுற்றிலும் பரந்த வெளி. ஐந்தாறு சிறுவீடுகள்.

ஐயோ! வெட்கமற்ற ஜன்மம். மனிதனுக்கு என்ன ஆசை! பணம் சம்பாதித்து வயிறு வளர்த்து, இத்தொண்டில் பெறுமையுறுவதற்காகப் பிறமனிதர்கள் வீட்டில் பல்லைக் காட்டி நிற்பதற்கென்றே சென்ற நான் என் காரியம் நன்கு பலியாது தங்கியிருந்த சமயம் அப்பொழுது! பிறமனிதர்களைட்பார்க்குந்தோறும் அவரிடம் தாழ்ந்து 'என் நிலைமையைக் கவனியுங்கள்' என்று இரந்து கேட்கவும் மனிதனுக்குத் தைரியம் வருகிறதே!!

வெகுதூரத்தில் இனிய நாதஸ்வரம் கேட்டது. படார் படாரென்று 'உடல்' வாத்தியத்தின் ஒலியும் கேட்டது. திடுக்கிட்டு எழுந்தேன். அத்திக்குநோக்கி நடந்தேன். பல வயல்களை தாண்டி ஓர் விசாலமான சாலைக்கு வந்தேன். சிறுகாற்றில் மரங்கள் அசைந்தன. வியர்த்த என் உடம்பு சிறிது தாபந் தணிந்தது. என் மனத்தின் வேதனை மாத்திரம் ஏதோ தாங்கொணாததாயிருந்தது. 'நெஞ்சே! பரந்தஇவ்வுலகில் நீ தனியன்! தனியன்! உனக்காக யார் அனுதாபிப்பர்? உனக்காக யார் கண்ணீருதிர்ப்பர்? உன் பிழைகளை யார் பொறுப்பர்? உன்னை நல்வழியில் யார் நடாத்துவர்?' (இங்கு நான் உரக்கப்பேசினேனென்பதையும் மறந்தேன்.) 'ஐயோ! மனிதனுடைய முகத்தைப் பார்க்குங்கால் பயமாகிறதே! உலகம் என்னை ஏளனம் செய்யவே இருப்பது போலிருக்கிறதே! நெஞ்சே! நின்பிழைகளை யார் பொறுப்பார்'? ஓர் விசால

மான ஆலவ்ருக்ஷத்தில் சாய்ந்து நின்றேன். என் கண்களில் நீர் ததும்பியது.

'பொறுப்பாரும் பொறுப்பிப்பாரும் உண்டென்பதை மறந்தாயே! புருஷோத்தமனுடைய தயையில் அழியாத பாபங்களுளவடா' !!

யார் பேசியது! என்னுடன்—இவ்வமைதியான இரவில் உலகத்தினிடம் நம்பிக்கையற்ற என்னிடம்—இப்படிக் குளிர்ந்து பேசியது யார்? திரும்பி நோக்கினேன். 'ஸ்வாமி! என் ஸ்வாமி! தயாஸமுத்திரம்!' என்று விம்மி விம்மி அவர் திருவடியில் வீழ்ந்தேன். என்னை எழுப்பி உட்காரவைத்து என் கண்களைத் துடைத்த வண்ணம் 'வத்ஸா! உலகம் என்பது நம் நெஞ்சமே! ப்ரஹ்லாதன் தர்மபுத்ரர் இவர்களுக்கு உலகமே ஆனந்தமயமாயும் அருள்மயமாகவும் தோன்றிற்று. நம் நெஞ்சின் நேர்மையே உலகின் இருப்பு. வத்ஸா! நீ துயருருவது ஸரியே! ஆயினும் தீனதயாபரனை மறந்து என் பிழைகளை யார் பொறுப்பர்' என்று கைவிரித்தனையே. ஐயோ! ஐயோ என்ற இனிய குரலில் சொன்னார். என் கண்ணீரைத் துடைத்து நான் 'என் தெய்வமே! தேவரீர் தோன்றியபொழுதெல்லாம் என் துயர் ஒழியும். ஒரு திவ்ய தேசலாபமாகும். இன்றும் அப்படி.....' என்று மழமழத்த குரலிற் சொன்னேன். ஸ்வாமி புன்னகையுடன் 'வா' என்றார். 'வா' என்று என்னைக்கூப்பிடுவார் வேறு யார்? சென்றேன்.

குளிர்ந்த பொழுது. ஓர் பெரிய தடாகத்தை அடைந்தோம். தடாகத்தைத்தாண்டிக் குறுகிய சிலவீதிகள் கடந்து விசாலமான ஓர் திருவீதியடைந்து நின்றோம். என்ன கண்டேன்! என்ன கண்டேன்! மிதமான பரிவாரங்களுடன் ஸ்ரீ புருஷோத்தமன் பவனி வந்துகொண்டிருந்தான். ஜில் ஜில் என்ற சிறு ஜாலர் ஒலி. குமுகுமு என்று ம்ருதங்கத்தின் குமுறல். குயிலைப்பழித்த குரலுடைய இருமாதர் கானம். விஷயமோ மனதை அள்ளிப்பறிக்கும் மாதவன் அன்பு. 'வஹதிமலயஸமீரே... க்ருஷ்ண... வஹதிமலயஸமீரே...' அஷ்டபதி!

'வத்ஸா! அதோ வருபவன் **மருவினிய மைந்தன்**. நாம் நிற்பது **திருஇந்தளூர்**. அது நீ உன் காரியமாகவந்த கிராமத்திலிருந்து மூன்றுமைல் உள்ளது. ஸர்வேச்வரன் பங்குனி உத்ஸவம் கண்டருளி இன்று ஸப்தாவரண தினம். நேற்று ஓடிய திருத்தேர் அதோ! புறப்பாடு இன்றையதினம் தாமதமாய்விட்டது. ஜனங்கள் தேரோட்டம் கண்டு களித்துப் பத்துநாள் விழாவின் ச்ரமத்தால் அயர்ந்து நித்திரைபுரிகின்றனர். தூங்கும் குழந்தைகளிடை ஸஞ்சரிக்கும் தாய்போல்

தாமோதரன் மாத்திரம் சலிக்காமல் திருவீதி வருகிறான். இன்று நான்கு வீதிகளிலும் கானஒலியே. திருக்கோயில் சென்றே நாதஸ்வரம்' என்றார். என் உடம்பு புளகாங்கித மாயிற்று. பரந்தாமனைப் பார்த்தேன். நீலமாமுகிலன்ன திரு மேனியில் ரத்னாபரணங்கள் ஜ்வலித்தன. துலங்கு நீண்முடி. முடியில் பன்னிறப்பூவளயம். நீண்டழகிய நாஸிகையில் நக்ஷத் ரம்போல் மிளிரும் வஜ்ரப்புல்லக்கு. மகரக்குழை. தோளோடு புணர்த்த சுடராழி சங்கு. திருக்கைகளில் வஜ்ர கங்கணங்கள் தாரகைகளையே மாலையாகக் கோர்த்ததுபோல் நீலச்சுடர் விட்டொளிக்கும் சீமைக்கமல அட்டிகை. அசைந்தாடும் வன மாலை. பீதகத்திருப் பரியட்டம். என் அப்ப! என் அப்ப! என்ன கண்நிறைந்தகாக்ஷி. உன்னைக்காணும் பொழுதெல்லாம் உடல் ஆனந்தமுறுவதே! என் துயர் ஓடியதே. என்ன உரு வம்! என்ன அருள்! என்ன அசைவு!

இனிய கான ஒலி 'கோகிலகலவர, கூஜிதயா, ஜித, மன ஸிஜ தந்த்ர விசாரம்...ஸகிஹே! கேசிமதனமுதாரம் ரமயமயா ஸஹவாரம்...' இப்பாட்டில் ஸ்ரீநப்பின்னைப் பிராட்டியான ராதையின் இனிய உருவும் துயரும் என்மனதில் அழுந்தியது. புருஷோத்தமன் நகர்ந்தான். நாங்களும் பின்தொடர்ந்தோம். ஸ்வாமி ஆரம்பித்தார். 'வத்ஸா! இத்திருவாளனுக்கு ஆழ்வார் **'மருவினியமைந்நன்'** என்று திவ்யநாமம் கொடுத்தார். மருவு வார்க்குமாளா இன்பந்தரும் யுவகன் என்பதே பொருள். பண்டு குருத்ரோஹத்தால் நலிவுற்றநிசாகரன் ஸர்வேச்வரனை வழிபட்டுச் சாபம் நீங்கிக் களித்தஇடம். எம்பெருமான் அத னால் சந்த்ரசாபவிமோசனன் என்ற பெயர் பெற்றான். காவேரி நதி சகல நதிகளையும்விட அதிகமான பாவனத்வம் பெற்ற ஸித்தி க்ஷேத்ரம். தர்மதேவதை நொந்து சரீரலாவண்யம பெற்ற திவ்ய பூமி. ஸ்ரீ மார்க்கண்டேயர், சங்க*சக்ரதாரியாய் திருவனந்தாழ்வானை திருவணையில், மலை சாய்ந்ததுபோல் கிடந்த மாதவனை ஸாக்ஷாத்கரித்து முக்திபெற்ற முக்யநிலம். **ஸ்ரீதிருமங்கைமன்னனது** இனிய பத்துப் பாசுரங்களால் அமு தைப்பருகிய பக்தவத்ஸலன் வாழும் இடம. சந்திரன் சாபம் நீங்கியதால் இவ்வூர் இந்தளூர் என்றறியப்படும். கண்ணே! இக்கஞ்சதளாக்ஷனது வடிவழகைக்கண்டனையா! இவ்வழகைக் கண்ட பரகாலன் பெண்தன்மை ஏறிட்டு இவ்வெம்பெரு மான் சடக்கென அருளாததுபற்றிப் பேசாதனபேசி ஏசினின் றார். இவரது ஊடல் மொழிகள் நிறைந்தது இந்தளூர்ப்பதி

---

* 'இந்த திவ்யதேசம் ஒன்றில்தான் சதுர்புஜசங்கசக்ராதி ஸமேத சயனம்'

கம். அர்ச்சாவுருவாய் நின்ற அச்யுதன் தன்னை ஓடிவந்து அணையவில்லை என்று ஆக்ரஹித்து 'ஐயனே! உம்மை வாழ்த்தி நாங்கள் கண்ட சுகம் போதும். உம் வடிவழகை நாங்கள் காண எங்கள் முன்னால் ஒரு நடை நடந்தால் உம்உடம்பு வாடி விடுமோ அல்லது நாங்கள் உய்ந்துபோய் விடுவோம் என்ற ஆத்திரமா உமக்கு என்றும் பொருள்பட 'நும்மைத் தொழு தோம் நுந்தம் பணிசெய்திருக்கின்ற நும்மடியோம் இம்மைக் கின்பம் பெற்றோம்! எந்தாய்! இந்தளூரா! எம்மை ஒருக்கால் கருமமருளி ஆவாவென்றிரங்கி, நம்மை ஒருக்கால்காட்டி நடந் தால் நாங்கள் உய்யோமே' என்கிறார். கடைசியில் 'இப்படி பக்தர்களுக்கென யாம் நினைந்த திருமேனியை அவர்களுக்கு அருளாது இருக்கிற நீர் அவ்வுடம்பைக் கட்டிக்கொண்டு வாசிவல்லார் வாழ்ந்தேபோம், என்று கோபிக்கிறார். பிறகு கோபத்துடன் 'இந்தளூரீரே! பிராட்டி உம்மைப்பிரிந்து பத்து மாஸம் தரித்தாள். சடகோபன் உம்முடைய எளிமையை எத் திறம் என்று உன்னி ஆறுமாஸம் மோஹித்துத் தரித்தார். அடியாள் உம்மைப்பிரிந்து அவர்போல் தரிக்கவல்லேன். உடனே இறந்து படுவேன் என்ற பொருளில் 'உம்மடியா ரெல்லாரோடும் ஒக்க நினைத்தீர்' என்று விரட்டுகிறார். பிறகு பல திவ்ய தேசத்தில் அவன் எழுந்தருளியிருக்கும் கருணையைக் கொண்டாடுகிறார்.

'சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே மருவினிய மைந்தா அந்தண் ஆலிமாலே சோலைமழகளிறே நந்தாவிளக்கின் சுடரே நறையூர்நின்ற நம்பி! எந்தாயிந்தளூரா அடியேற்கிறையு மிரங்காயே' ப்ரபு அவருடைய அபிமதங்களைத் தலைக்கட்டி னன். அப்படிப்பட்ட புண்யபூமியப்பா இது! அதோ தடாகம். அதோ கோபுரம்' என்று முடித்தார். என் துயரம் பஞ்சாய் பறந்தது. ஸ்வாமியின் திருக்கரங்களை கண்ணில் ஒற்றிக் கண்ணீர் விட்டேன். அந்த திவ்ய ஹஸ்தங்களை அவலம்பித்ததை நான் ஒரு பயமும் அறிந்திலேனாக உணர்ந்தேன். 'உபாய ஹஸ்தம் தஸ்ய லோகநாயகஸ்ய ஈக்ஷிதம்' 'ப்ரஜா வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா... ...பாஹுச் சாயாம் அவஷ்டப்தோ யஸ்ய லோகஸ்ய ஸம்ஶ்ரிதா' என்றல்லவோ முனிவசனம். க்ருபாநிதியைப் பற்றியவுடன், ரமாநிதி கைவசமாகிறார். என்ன பாகவதர் பெருமை. 'ஸ்ரீ பாகவத வைவஶ்யவாஹ நக்ஷமா க்ஷித்ராதி நிவ்ருத்யஹம் ஜுஷஸ்வ ஹாஸ்தோஷா: ஸந்தோ ஸாஸனம் ஸாஸ்வத்யவ ஸ்ரேயோ வஸா: ' என்றல்லவோ நம் கவிதார்க்கிகஸிம்ஹம் அருளிச்செய்தது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

நாடகம்.

[தி. ராமஸ்வாமி அய்யங்கார்.]

சாஸ்த்ரங்கள் பகரும் பலவகைப் பொருள்களில் நமக்கு உபஜீவ்யங்களாயிருப்பவை இரண்டே. அவையாவன: ஸ்ரீய:பதியினுடைய தயையும், ஸங்கல்பமும். ஆகவேதான் ஆசார்ய ஸார்வபௌமன் தயைக்கு ஒரு ஸ்தோத்ரமும், ஸங்கல்பத்துக்கு ஒரு நாடகமும் அமைத்தருளினர். தமது அனந்தங்களான அருளிச்செயல்களில் அடிக்கடி தயையின் பெருமையும் ஸங்கல்பத்தின் மஹிமையும் பேசப்படுவனவாயினும் அவைகளின் ஒப்பற்ற மேன்மையும் நம் திறத்தில் அவைகள் புரியும் உபகாரத்தையும் எண்ணி அவைகளுக்காக இரண்டு தனி க்ரந்தங்கள் நிர்மித்திருக்கிறார். திருமால் தயையை தயா தேவியென நிர்த்தேசித்து ஸ்த்ரீயாக வர்ணிக்கும் ஒரு ஸ்தோத்ரமும், பகவத் ஸங்கல்பத்தைப் புருஷனாக வ்யவஹரித்து ஒரு நாடகமும் செய்தருளிய அழகு பரம ரஸிகசிகாமணியான நம் தேசிகோத்தமனிடமேயன்றி வேறு எங்கு காண இயலும்? திவ்ய தம்பதிகளான அம்மிதுனத்திடத்தே தயா. ஸங்கல்பங்களாலான வேறொரு மிதுனத்தைக்கண்டறிந்து கவிபாடியதே கவிஸிம்ஹம் நம் திறத்துப் புரிந்த கருணைக்கு அத்தாக்ஷி.

ஸங்கல்பம் அநுக்ரஹத்திற்கும் நிக்ரஹத்திற்கும் பொது. அக்ஞாத நிக்ரஹையான தயா ஸம்பந்தத்தால் அநுக்ரஹ ஸங்கல்பமே ஸித்திக்கும. ஆகையால் நமக்கு இந்த மிதுனமே உத்தேச்யம். உபாயவேளையோடு போகவேளையோடு வாசியற உத்தேச்யமான ஸ்ரீய:பதியென்ற ஒரு மிதுனத்தைக் கவி பாடியபேர்கள் கணக்கற்றவர். ஆனல் இந்த மிதுனத்தின் பெருமையை உள்ளபடியறிந்து உலகோரறியும்வண்ணம் கவி பாடியவர் கவிகேஸரி ஒருவரே.

உலகமனைத்தும் ஒரு நாடகமேடையென ஒரு ஆங்கிலக் கவிவர்ணித்தான். அவன் தோன்றுவதற்கு300ஆண்டுகளுக்கு முன்னமே நம் நாட்டில் அந்த அர்த்தம் ஸ்வாமி தேசிகனல் நிலைநாட்டப்பெற்றது. அந்த ஆங்கிலக்கவி தத்துவ உணர்ச்சியில்லாதவனானபடியால் மனிதர்களைமட்டும் நாடக பாத்திரங்

களெனப் பேசினன். தத்வ ஹித புருஷார்த்தங்களை உள்ள படியே உபதேசிக்கவல்ல உத்தமரான நம்தேசிகன், இவ்வுலக நாடகத்தில் முக்கிய நடிகர்கள் பெருமாளும், பிராட்டியு மெனப் பலவிடங்களில் பகர்ந்திருக்கிறுர். நாடக மேடை (Stage) என்று மட்டும் ஷேக்ஸ்பியர் சொன்னவிடத்தில் விசித் ரமான இவ்வுலகு, நாடகமேடைமட்டுமன்றி நாடகமேடையும் நல்திரைகளும் (Stage and screen) தானே ஆகும் என்று காட் டும்படி ஸ்ரீ யாதவாப்யுதய மஹா காவ்யத்தில் ஒரு ச்லோகம் திகழுகிறது.

‘ லீலா நாடக ரங்கஸ்ய ஸ்வஸ்த்ரு க்ருபா... தயா ஸ்வயம் ।
... விஸ்வஸ்ரீம் ... விஹ... ஸ்ரீ ... ॥

ஸ்ரீ யாதவாப்யுதய மஹாகாவ்யத்திற்கு வ்யாக்யானம் செய்த அப்பைய தீக்ஷிதரென்னும் மஹாப்ராக்ஞரே அவச மாய்ப் புகழ்ந்து கைவாங்கி நின்ற இந்த ச்லோகத்தின் எல்லா பாவங்களையும் உணரவல்லவர் ஒருவருமிலர். ப்ரக்ருத விஷ யத்திற்கு உபயுக்தமான அம்சங்களைமட்டும் கவனிப்போம். நாடகத்திற்கு வேண்டிய திரைகளை சித்திரத்தில் கைதேர்ந்த ஒருவன் எழுதுகோலையும், வர்ணங்களையும் கொண்டு ஒரு துணி முதலிய பொருள்களில் எழுதிமுடிப்பது வழக்கம். அது போல் இந்த உலக சித்திரத்தை ஸ்ரிய:பதி லீலையென்னும் எழுதுகோலால் தயையென்னும் ம(ஹி)ஷியைக் கொண்டு தம்மிடத்தில் தாமே எழுதிக்கொண்டாராம். ஸ்வயம் என்ற தால் நிமித்தகாரணத்வமும் ஸ்வஸ்மின் என்றதால் உபாதான காரணத்வமும் பேசப்பட்டனவென்றும் சாஸ்த்ரக்ஞர்கள் ரஸாநுபவம் செய்யட்டும். தாம் நடிக்கவேண்டிய நாடகங்க ளுக்கு தகுந்த திரைகளைத் தாமே நிர்மித்துக்கொண்டார் என்று ‘ஸ்வயம்’ என்ற சப்தத்திற்குப் பொருள் கூறலா மெனத் தோற்றுகிறது. ‘ரஸோ வை ஸ:’ என்றவன் ரஸத்தை யுணர்ந்து வேறு யாரால் அவனுக்கு உசிதமான திரைகளைச் சித்திரிக்கமுடியும்? திரையில் எழுதுகோல் காணப்படுவ தில்லை. விவித வர்ணங்கள் மட்டுமே காணப்படும். அது போல் லீலாகாரியமான இந்த ஸ்ருஷ்டியில் முக்கியமாய்க் காணப்படுவது தயையே. இதன்விவரணத்தை தயாசதகத்தில் காணலாம். இப்படித் திரைகளும் ரங்கமும் ஏற்பட்டபிறகு நாடகபாத்திரமும் தானேயாய் நிற்கிருனெனப் பேசுகிறுர்

ஸ்வாமி. இவன் போடும் வேஷங்கள் பல. அவை இரண்டு வகைப்பட்டிருக்கும். ஜகத்வ்யாபாரம் நடைபெறுவதற்காகப் போடும் வேஷங்கள் ஒருவகை. ஜகத்ரக்ஷணத்திற்காகப் போடும் வேஷங்கள் வேறொரு வகை.

ஸ்ருஷ்டிஸ்தித்யந்த நாடிகாயாம் வைசேஷிகவிவித
வேஷவைசித்ர்யம் க்ருத்வா ஸம்பாவயந்தி ஹ்ருஷ்யந்த: க்ருதின:
யத்ர ஸம்ஸாரநிர்வேஶக்ஷணதக்ஷா: ॥

(ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹார நாடகங்களுக்குத் தகுந்தபடி அவன் போடும் ப்ரும்ம விஷ்ணு ருத்ரவேஷங்களைக் கண்டு ரஸித்து அவனைப்பெருமைப்படுத்திப் பாராட்டுமவரே தன்யர்களாம்) நாடகம் நடிப்பதிலும் அதைக்கண்டு ரஸப்பதிலும் ஸ்வாமி தேசிகனுக்குள்ள கௌரவம் இந்த ச்லோகத்தில் வெளிப்படுகிறதல்லவா? ஜகத்ரக்ஷணத்திற்காகப் போடும் வேஷங்கள் தசாவதாரங்கள்—'தேவோ ந: ஶுபமாதநோது தஶதா நிர்வர்தயந் பூமிகாம் ரங்கே தாமநி லப்தநிர்பரரஸைரத்யக்ஷிதோ பாவுகை:' என்ற தசாவதார ஸ்தோத்ரம் முதல் ச்லோகத்தில் இந்த தசாவதார வேஷங்கள் ப்ரசம்ஸிக்கப்படுகின்றன. அந்த ச்லோகமே ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்திலும் காணப்படுகிறது.

ராஜவேஷம் அவனென்றால் அவனுக்குத் தகுந்த ஸ்த்ரீ வேஷம் அவளன்றி யார் போடமுடியும்? அதையும் அழகு ததும்பும் சொற்கள்கொண்டு ஸ்வாமி வர்ணித்திருப்பது அனைவரும் அறிந்த விஷயமே.

'யஸ்ய ॥ வேஷப்ரபேதேஷ்வநுகுணாநு பாவாநு ஸ்வயம்
பிப்ரதீ யஸ்ய தேவீ விஹரதே நாநா
க்ருதிநாயிகா.'

நாடகத்தினுடையவும் நடிப்பதினுடையவும் சுவடறிந்தவர்களே இந்த வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு சொல்லின் ஸுக வெள்ளத்தில் ஆழ்ந்து ரஸிக்க வல்லவர்கள். (1) ஹாவங்கள் (2) விவிதங்களான ஹாவங்கள் (3) ஒவ்வொன்றுக்கும் அநுகுணமான பிராட்டியின் ஹாவங்கள் (4) அந்தந்த ஹாவத்திற்கு யுக்தமான நாநாக்ருதி (வெவ்வேறு) வேஷம் (5) இந்த வேஷத்துக்குத்தகுந்த விஹாரம் (6) இவையனைத்தும் ஸ்வயமாகத் தானே செய்வது. (பூர்வாப்யாஸமும் வேண்டார் போலும்).

ராகவத்வேऽபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி' என்று பெரிய பிராட்டியாரின் அனுரூப அவதாரங்களை வர்ணித்த மற்றவர்களும் இவ்வளவு ரஸமாகப் பேசக்கற்றிலரே ! ஒவ்வொரு நாடகத்திலும் நாடகபாத்திரங்களுக்கு அவரவர் ஏற்றுக்கொண்ட வேஷத்தைப்போட்டுவைக்கும் நிபுணரொருவர் திரைக்குப்பின் வேலை செய்வது ப்ரஸித்தம். இவருடைய கைத்திறத்தைப்பொறுத்தது நடிகருடைய வேஷத்தின்பொருத்தம். எம்பெருமானும் பிராட்டியும் அவதாரவேஷங்களைப் பரிக்ரஹிக்கும்போது அந்த நிபுண க்ருத்யத்தை ஏற்றுக்கொண்டு அந்தந்த வேஷத்துக்குத் தகுந்தபடி அவர்களைத் தயாரிப்பது தயாதேவியாம் என்று (Green Room Artist) பாசுரமிடுகிறூர் தயாசதகத்தில்— 'விசித்ரகுணவிசித்ராம் விவிததோஷ வைதேசிகீம் வ்ருஷாசலபதேஸ்தநும் விசதயந்தி ஸத்த்வோத்தராம்' என்றபடி விசித்ரங்களான வகைகளில் வெகு அழகாகவும் யாதொரு பழுதில்லாமலும் அந்தந்த வேஷங்களைப் போட்டுவைக்கிறூராம் தயாதேவி. இனி நாடகத்தின் நுட்பங்களெல்லாம் இந்த வைராக்ய நிதிக்கு எப்படித் தெரிந்ததோ என்றுதான் வியக்கவேண்டிவருகிறது. பகவத்விஷய ராஸிக்யத்திற்கும் விஷயாந்தர அனுபவத்திற்கும் பேதம் இதுதான். திவ்யதம்பதிகளுடைய நாடகரஸானுபவம் நடிப்பதோடு நிற்பதில்லை. பிறர் நடித்துத் தாம் காணவேண்டுமாம். அதிலும் அவர்கள் பரம ரஸிகர்கள். இப்போது ஸ்ருஷ்டி லீலையாகிறது. சேதனங்களை அசேதனத்துடன் சேர்த்துவிட்டு அதனால் ஏற்படும் இன்புறு மிவ்விளையாட்டை அனுபவிக்கிறூரும் ஸ்ரிய: பதி. அதை சரணாகதி தீபிகையில் காட்டியருளுகிறூர்—'ஸ்வாநி நாத விவிதாந்யபிஸம்விப்ய க்ஷேத்ரஜ்ஞ ஸம்ஸார நாட்ய ரஸிகஸ்ய தவ' ஸம்ஸாரநாடகத்தில் சேதனர்கள் பலவிதமாக நடிப்பதைக்கண்டு ரஸிக்கிறுகையால் அந்த ரஸத்தைக்கொண்டு அவனை ஸம்ஸார நாட்யரஸிகனென்று பேசினூர். ஸ்ரீ யாதவாப்யுதயத்தில் இந்த ஸம்ஸார நாடகத்தை நடத்திவைக்கும் ஸூத்ரதாரனாக எம்பெருமானை அனுபவிக்கிறூர். 'ஸ ஏஷ லோகத்ரயஸூத்ரதார: வயஸ்யவாக்யாநி வராவராணி' சராசரங்களனைத்தையும் ஆட்டிவைக்கும் திறத்தைச் சொல்லி நாடகத்திலுள்ள ஸூத்ரதார க்ருத்யத்திலுமதிசயிதவல்லமையுடையவன் எம்பெருமான் என்று நிரூபித்தருளுகிறூர்.

இப்படிப் பலபடியாக நாடகத்தில் எம்பெருமானுக்குள்ள ஆதரத்தைக் கண்டு தாமும் நாடகத்தில் அன்வயிக்க

ஆவல்கொண்டதை ஸ்வாமி அருளிச்செயல்களில் காண்கிறோம். எம்பெருமான் தம்மை ஸம்ஸாரநாட்யரங்கத்தில் அமைத்ததை ஒப்புக்கொண்டு அந்த நாடகத்தில் அவனுக்கு திருப்தி விளைவிக்கவல்லதான ஒரு வேஷத்தை வேண்டுகிறார். ‘[illegible]’. இது கீழ்ச்சொன்ன சரணாகதிதீபிகா ச்லோகத்தின் உத்தரார்த்தத்தில் வருவது. உண்மையான பாகவதர்களிடத்தில் எம்பெருமானுக்குள்ள ப்ரேமையைக்காட்ட முன்வந்தவராய், எனக்கு வாஸ்தவமான பக்த்யாதிகள் இல்லாவிடினும் இருப்பதுபோல் வேஷம் போட்டாலும் உலகத்திடைத் தோன்றிய மக்களைத் தம் பக்கல் எந்த வ்யாஜத்தாலாவது சேர்த்துக்கொள்ள ஸமயம் பார்த்திருக்கும் ஸர்வேச்வரன் திருவுள்ளம் உகப்பது திண்ணம் என்ற நற்பொருளை நிலைநாட்டுகிறார். ‘கையார் சக்கரத்து என் கருமாணிக்கமே என்றென்றுப் பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமேயாடியவர்களெல்லாம் மெய்யே பெற்றொழிந்த’ வ்ருத்தாந்தத்தைக் கண்டும் கேட்டும் தாமும் அப்படி ஆடவேண்டும் (நடிக்க வேண்டும்) என்று வேண்டுகிறார்போலும்’ ஆழ்வாருடைய ‘ஆடி’ என்னும் சப்தத்திற்கு ‘நடித்து’ என்று பொருள் கூறுகிறார் என்று தோன்றுகிறது. நாடகத்திற்கு ஆட்டம் என்று பெயருண்டன்றோ?

இதுவும் போதாதென்று ஒரு நாடகமெழுதித் தமக்கு அதில் ஒரு பாத்திரம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று திருவுள்ளமாய் ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயமென்று ஒரு மஹா நாடகத்தை அருளிச்செய்தார். அதில் சிஷ்யனென்னும் பாத்திரத்தைத் தமக்குத் தகுந்ததாகத் தேர்ந்தெடுத்து நாடகத்தை அமைத்திருக்கிறார். வினயமே வடிவெடுத்தவராதலின் வேதாந்தவாசிரியரானபோதிலும் தமக்கு ஆசார்யஸ்தானத்தை விரும்புவதிலும் சிஷ்ய ஸ்தானத்தை விரும்புவது யுக்தமெனக் கருதினபடியாகும். ஆசார்யவேஷம் எம்பெருமான் போடும் வேஷமன்றோ! ‘[illegible]’ என்ற அருளிச்செயலின்படி எம்பெருமானேயன்றோ உலகோரைக் கரையேற்ற ஆசார்ய வேஷம் போட்டுக்கொள்கிறான். எம்பெருமானுக்கு உரியது எம்பெருமானார் வேஷமென்று தாம் விரும்பாதிருந்தார் போலும்!

நாடகம் நடிப்பதிலும் நாடகம் பார்ப்பதிலும் எம்பெருமானை அனுகரிக்கும் இவ்வாசார்யோத்தமன் நாடகம் எழுதியதோர் அம்சத்தில் அவ்வெம்பெருமானை அதிசயித்துவிட்டார். ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் போன்ற உயர்ந்த நாடகத்தை எழுதிய பெருமை எம்பெருமானுக்கில்லையே. ஆகவேதான் இவ்வா[illegible] ‘[illegible]’ என்று அனைவரும் கொண்டாடுவது!

குறிப்புகள்.

(திருப்பூந்துருத்தி V. கிருஷ்ணஸாமி அய்யங்கார் B. A.,)

1 திருவேங்கடமுடையான் ஒரு திருக்கையால் தமது திருவடிகளைக் காட்டிக்கொண்டும் மற்றொரு திருக்கையால் தமது முழங்காலைத் தொட்டுக்கொண்டுமிருப்பது "ஸ்வாம்ஸ்வம் ஸம்ஶ்ரிதாநாம் ஜநாநாம் ஸம்ஸாராப்திர் ஜாநுதக்நः கிலேதி, என்றபடி தமது திருவடியில் சரணமடைந்தவர்களுக்கு ஸம்ஸார ஸமுத்ரம் முழங்கால் ஆழந்தான் என்று காட்டுவதற்காகவே என்று அகஸ்த்யமுனிவர் அருளியிடுகிறார்.

---

2 மநுஸ்ம்ருதியில் சரணாகதி வைபவத்தை 'யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்திதः। தேந சேதவிவாதஸ்தே மா கங்காம் மா குரூந் கமः॥' என்று வர்ணித்திருக்கிறது. இதில் யமன் என்று தென்திசைக்கோனைச் சொன்னதன்று. ஸர்வாத்மாக்களுடைய உள்ளேயுமிருந்து அவர்களை இயக்கும் ஸர்வேச்வரனைச் சொல்லியதே. அவனோடு அவிவாதமாவது: அவன் திருவடிகளில் சரணாகதிபண்ணுவதே என்று ஸ்ரீதேசிகனுடைய வ்யாக்யானமாகிய நடாதூரம்மாள் ஸாதிக்கிறார்.

---

3 ஸ்ரீ தயா சதகத்தில் நித்யர்களோடும் முக்தர்களோடும் விளங்கும் ஸ்ரீநிவாஸனை வேதமாகிற கடைவீதியில் விற்பனைக்கு வைத்திருக்கும் நித்யமுக்தர் (முத்துக்)களோடு இசைந்த இந்த்ரநீலமாக வர்ணிக்கிறார் ஸ்ரீதேசிகன். இந்த்ரநீலத்துக்கு லக்ஷணம் 'க்ஷீரமத்யே க்ஷிபேந்நீலம் க்ஷீரம் நீலதாம் வ்ரஜேத் । ஸ இந்த்ரநீலோ விஜ்ஞேயஸ்ஸர்வஸௌபாக்யகாரகः ஶுபாவஹः' என்றபடி பாலில் போட்டவுடன் பாலை நீலமாக்கும். ஸர்வ ஸௌக்யங்களையும் கொடுக்கும். எம்பெருமான் பாற்கடல் பள்ளியில் பாற்கடலையும் தன் நீலவர்ணத்தால் நீலமாகச் செய்வதும் பரம நிச்ரேயஸமான மோக்ஷத்தைக்கொடுப்பதும் ப்ரஸித்தமாக இருப்பதால் ஸ்ரீநிவாஸன் இந்த்ரநீலம்போலிருக்கிறான் என்னுமல் இந்த்ரநீலமாகவே இருக்கிறான் என்பது பொருத்தமல்லவா? ———

ஸ்ரீ அழகியசிங்கர்களின் புகழ்மாலை VI

ந்ருஸிம்ஹயஶோபோதா, ஸாந்த்ரேணா வாஸிதா ஹ்ருதயம் ।
த்யாப்யா ஷட்பதநிர்வேஶ ஸததம் ஸம்ப்ரகாஶதே ॥ 1 ॥
ஷட்த்வேஷா கீர்த்திஸ்ஸ்ரக் கமநீயதமார்ணாவ ந்ரு-
ஸிம்ஹாநாம் । ஸாந்த்ரராஜந்யசிதா ஸாந்த்ரஸ்ரிவா ஸா-
யீக்ஷிராயிக்யதே ॥ 2 ॥ (ஸம்பாதகர்)

देशिकमणिशतकम् ॥

(अनुवृत्तम्)

विद्यारण्यमुनिं च डिण्डिमकविं श्रीकृष्णमिश्रं तथा वादार्थं समुपागतं सुचतुरं जित्वा क्षणाभ्यन्तरे । नानार्थान्वितयादवाभ्युदयसत्सङ्कल्पसूर्योदयौ कृत्वा तान् स्ववंशे चकार कृतिमान् यस्तं भजे देशिकम् ॥ १८ ॥ स्थित्वा कांश्चन वत्सरान् बहुमतः श्रीरङ्गपुर्यां ततः शिष्याद्यैस्सह कुम्भघोणनगरी श्रीविल्लिपुत्तूरिति । ख्यातान् श्रीनिधिवासपावनतमान् देशानटित्वा हरेर्मूर्तीस्ताः शिरसा प्रणम्य जननस्थानागतं संश्रये ॥ १८ ॥ गेहद्वारसमीपमागतवता यः सर्पसञ्जीविना त्वं चेत सर्वकलास्वतन्त्रबिरुदं धत्सेजयाद्यैव माम् । इत्युक्तोऽथ महाभुजङ्गमगणान् निर्दिष्टरेखागतान् संशान्तानकरोत् खगेश्वरमहादण्डेन तं भावये ॥ १९ ॥ गत्वा रङ्गपुरं पुनस्तदधिपं नत्वा रहस्यान् बहून् शिष्याणां सुलभान् प्रपन्नहृदयः ग्रन्थानथ द्राविडान् । चक्रे यः श्रितसद्धियश्च सुबहून् श्रीभाष्यमध्यापयत् किं च श्रीवरदप्रियस्तदभिधं भेजे सुतं तं नुमः ॥ २० ॥ रङ्गे श्राद्धविघातकाः उपगते भोक्तुं मुकुन्दे स्वयं यं प्रापुर्विजिताः य एष कमलास्तोत्रेण वैवाहिकम् । दत्वा वित्तमथाकरोत् बटुवरं तूर्णं परीक्षार्थिभिः दत्तं वित्तमवेक्ष्य तण्डुलगतं तत्याज यस्तं भजे ॥ २१ ॥ मध्यस्थैरितएकरात्रसमये श्लोकान् सहस्रं शुभान् कृत्वा सत्कविकेसरीति बिरुदं योऽवाप सभ्यादरात् । यः सर्वज्ञसुसिंहनायकमहीपालस्य तत्वार्थिनो ग्रन्थान् तत्वरहस्यबोधनपरान् कृत्वाऽर्पयत्तं भजे ॥ २२ ॥ नीत्वा रङ्गपुरे मतप्रवचनैर्बह्वीस्समाः पावनीः गत्वा यादवभूधरेन्द्रनगरं नत्वा च नारायणम् । स्थित्वा चोत्तमसत्यमङ्गलपुरे मान्यो बहून् वत्सरान् पश्चाद्रङ्गपुरं समेत्य सुबहून् योऽध्यापिपत्तं भजे ॥ १२ बिम्बं स्वस्य विधाय जातु सहसा यश्चाजगच्छालिनं स्वस्मिन् सर्वकलास्वतन्त्रबिरुदं दृष्ट्वा ह्यपूर्वान्वितम् । यत्पादाम्बुजसेवनेन विबुधः श्रीलक्ष्मणार्योऽभजत् वैवर्ण्योज्झितमङ्गगात्मजमपि प्राज्ञं गुरुं तं भजे ॥ २४ ॥ स्थित्वाऽस्यां भुवि यः शताधिकसमाः कृत्वा प्रबन्धान् बहून् गैर्वाण्यां द्रविडे च लक्षणमतं सिद्धान्तयित्वा स्थिरम् । सौम्याब्दे बुधवासरे शुभतरे मासे गुरुः कार्तिके प्राप श्रीवृषभाद्रिनाथपदवीं घण्टाकृतिं तं भजे ॥ २५ ॥

इति श्रीरामदेशिकाविरचिते देशिकमणिशतके

तृतीया चरित्रपद्धतिः सम्पूर्णा ।

अथ मिश्रपद्धतिः ।

विहाय निद्रामुषसि ध्यायन्तं भक्तवत्सलम् । गद्यपद्यमयैः स्तोत्रैः सूक्तैश्च हृदयङ्गमैः ॥ १ ॥ ततः स्नानोपकरणैर्गत्वा तीर्थं सुपावनम् । स्नानादितर्पणान्तं च कुर्वन्तं हरिसाक्षिकम् ॥ २ ॥ पश्चाद्गेहं समागत्य कृत्वाऽभिगमनं हरेः । ततो देवालयं प्राप्य नत्वा च मधुसूदनम् ॥ ३ ॥ श्रीभाष्यादीन् सुशिष्येभ्यो बोधयन्तं मनोहरम् । कृत्वा माध्याह्निकं स्नानमाराध्य च हयाननम् ॥ ४ ॥ इज्यामापूर्य सद्ग्रन्थान् रचयन्तं बहूंस्ततः । सायङ्कालिकसन्ध्यादीन् कृत्वा शास्त्रानुसारतः ॥ ५ ॥ प्रणम्य रङ्गधामादीन् प्रथमे प्रहरे बहून् । ग्रान्थिकान् विषयान् सम्यक् विमृशन्तं गुरुं भजे ॥ ६ ॥ एवं दैनन्दिनं कर्म यथाविधि चकार यः । मनोवाक्कायसारूप्यमेत्यायं जयतां भुवि ॥ ७ ॥ शरीरमिन्द्रियग्रामाः ज्ञानं च हृदयादिकम् । गोविन्दे योऽर्पयन् सर्वं उपायङ्कजयत्वयम् ॥ ८ ॥ दिनेशशशिनावेव किमु देशिकदेहताम् । प्राप्ताविति विपश्चिद्भिः तर्क्यमाणं गुरुं भजे ॥ ९ ॥ चन्द्रः किं स्वयमागत्य गुर्वाननमिभेन तु । तेजो गृह्णन् विलसतीत्यूह्यमानं गुरुं भजे ॥ १० ॥ धरता द्वादशान् पुण्ड्रान् वहता पुस्तकं करे । ज्ञानमुद्रां च गुरुणा तेन मे प्रीयतां मनः ॥ ११ ॥ शिष्याध्यापनवेलायां हरिर्देशिकतां गतः । किमितीत्यूह्यमानाय देशिकाय नमो नमः ॥ १२ ॥ विष्णुघण्टा स्वयं यस्य क्षमां दर्शयति स्फुटम् । ताडिता बहुभिर्लोकैः नमस्तस्मै क्षमावते ॥ १३ ॥ यदीयघण्टाकृतेर्यस्य नादः शत्रून् भीषयति ध्रुवम् । प्रियान् सन्तोषयत्यस्मै देशिकायास्तु मङ्गळम् ॥ १४ ॥ सर्वतन्त्रस्वतन्त्राय वेदान्तार्याय धीमते । कवितार्किकसिंहाय वेङ्कटेशाय मङ्गलम् ॥ १५ ॥

इति श्रीरामदेशिकविरचिते देशिकमणिशतके
चतुर्थी मिश्रपद्धतिः सम्पूर्णा ।

वरदार्यगुरोस्सूनुः वात्स्यः श्रीरामदेशिकः । नडादूरिति विख्यातकुलो न्यायशिरोमणिः ॥ १ ॥ वीरराघववर्याणामुत्तमूर् चक्रवर्तिनाम् । मीमांसान्यायवेदान्तशास्त्रेषु सुमहत्स्वपि ॥ २ ॥ पारङ्गतानामुभयमीमांसावल्लभादिभिः । बिरुदैर्भूषितानां च शुचीनां गुणशालिनाम् ॥ ४ ॥ सेवयालब्धसाहित्यन्यायशास्त्रार्थसन्मतिः । शिरुङ्गट्टूरिति वरग्रामजातः शुचिः सुधीः । अकरोद्देशिकमणिशतकं कृपया हरेः ॥ ५ ॥

इति श्रीरामदेशिकशिरोमणिविरचितं
देशिकमणिशतकं सम्पूर्णम् ।

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய நடிகர்களின் ஸம்மேளனம்.

—:o:—

நிகழும் தைமீ 4உ 17-1-43 ஞாயிற்றுக்கிழமை ஷை நடிகர்களினுடையவும் தஞ்சையில் ஷை நாடகத்தை நடத்தி வைத்த தஞ்சை ஸ்ரீவைஷ்ணவ ஸபையாருடையவும் ஸம்மேளனம் ஸ்ரீதேசிகன் கிருபையால் தில்லைஸ்தானத்தில் திரு. திரு. நாராயணாசாரியர் திருமாளிகையில் நடைபெற்றது. இங்குதான் ஷை நாடகத்தின் பூர்வாப்யாஸங்களும் நடந்தன. மாலை 4 மணி முதல் 6½ மணிவரை ஸ்ரீமான் S. T. ஸ்ரீநிவாஸாசாரியர் M.A. வித்வான் L.T. ஸ்வாமியால் ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம் ஹரிஹரதாகாலக்ஷேபம் கேட்பவர் மனமுருகும்படி நடத்தப்பட்டது. கதாரம்பத்திற்குமுன் தஞ்சை ஸ்ரீவைஷ்ணவ ஸபையாரால் தஞ்சையில் நடந்த ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதய உத்ஸவ நாடகங்களின் ஸபாத்யக்ஷராக எழுந்தருளிய ஸ்ரீமான் ஸ்ரீதேசிக தர்சனரத்னதீபம் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியால் அனுப்பப்பட்ட ரூ. 100 உடன் ஸம்ரக்ஷிணீயை நடத்துவதுமட்டுமின்றி ஆங்காங்கு ஸங்கல்ப ஸூர்யோதய நாடகமும் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திகளின் உத்ஸவமும் நடத்தும்படி நியமித்து ரூ. 275 அனுக்ரஹிக்கப்பட்டது. மாலை 7-மணிக்கு தில்லைஸ்தானம் திருவேங்கடமுடையான் கருடோத்ஸவமும் சாத்துமறை கோஷ்டியும் விநியோகங்களும் நடந்தன. நடிகரும் மற்றவரும் யதோசிதம் உபசரிக்கப்பட்டனர் (ஸம்-கர்.)

ஸ்ரீ ஸித்தித்ரயம்

ஸ்ரீ ஆளவந்தார் அருளிய இக் க்ரந்தம்

ஸ்ரீ பரமபரி கோழியாலம் ஸ்வாமியின் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தின் ஞாபகார்த்தமாக ஷை ஸ்வாமியின் திருவடி தர்க்கார்ணவ, பண்டிதரத்ந சிரோமணி, உபய மீமாம்ஸா வல்லபரான உத்தமூர் தி. வீரராகவாசார்யஸ்வாமியால் அனேக தாள கோசங்களைக்கொண்டும் புத்தி பலத்தாலும் பாடசோதனம் செய்து வெகு க்ரந்தபராமர்சத்தோடு டிப்பணியுடன் விஷயவிபாகங்கள் செய்து எல்லாரும் ஸுகமாய் அர்த்தத்தை அறியும்படி தேவநாகரியில் வெளியிடப்பட்டது

இதன் விலை ரூ. 2—0—0. பிப்ரவரிமீ முடிவிற்குள் விலை ரூ. 1—0—0. (தபால் சார்ஜு வேறு)

இதுவும் பின்பக்கம் கண்ட க்ரந்தங்களும் தி. வீரராகவாசார்யர் ப்ரொபஸர் S.V.S. காலேஜ் திருப்பதி (மதராஸ்) விலாஸத்தில் கிடைக்கும். கைச்சிலவில் சாஸ்த்ர க்ரந்தங்களை வெளியிடும் அசக்த வடகலையான இவருடைய க்ரந்தங்களில் ஒவ்வொரு காப்பி வாங்கி உபசரிப்பது ஆஸ்திக (வடகலை) ஸ்வாமிகளுக்கவசியமாகும். ஸம்—கர்.

விற்பனைப் புஸ்தகங்கள்.

[ஸ்ரீ பரமபரி கோழியாலம் ஸ்வாமி அருளியவை]

			விலை ரூ.	அ
1	பரபக்ஷ நிராக்ருதி		2	0
2	பேதஸாம்ராஜ்யம்		1	8
3	உக்திநிஷ்டாபரித்ராணம்	(க்ரந்தலிபி)		12
4	மதுவித்யா மார்க்கதர்ப்பணம்	,,	4	4
5	லக்வாஹ்நிகம், ஹேயோபாதேயதர்ப்பணம், ஆசார்ய மங்களமாலிகா.	,,		6
6	ஸ்ரீஜயந்தி பாரணகாலப்ரகாசிகா, பாரண ஸப்ததியும்.	,,	0	3
7	பூர்ணத்வவிசாரம்	,,	0	4
8	ஸமஸ்யமான ஸௌக்யர்த்த நிஷ்கர்ஷம்	,,	0	2
9	ஹஸ்தீச வைபவம்		0	2

[ஸ்ரீ தி. வீரராகவாசார்யர் ஸ்வாமி அருளியவை நாகரியில்]

1	ஸ்ரீ உதயனாசாரியரின் ந்யாயகுஸுமாஞ்சலி பாகம் 2 தெளிய எளிய உரையுடன்	6	0
2	ஆபதேவீய ந்யாயப்ரகாசம் ஸுதாஸ்வாதத்துடன்	4	0
3	தர்க்கஸங்க்ரஹம் ஸுகப்ரவேசினியுடன்	1	0
4	வைசேஷிகதர்சன விமர்சனம்	0	8
5	ஈசாவாஸ்யோபநிஷத் ஆசார்ய பாஷ்ய தாத்பர்யத்துடன்	1	8
6	ஷை தமிழ் மொழிபெயர்ப்பு	0	8
7	பரமார்த்தப்ரகாசிகா (வேதாந்தம்)	2	0
8	ஸ்ரீ வேங்கடேச கல்யாணசரித காவ்யம்	0	12
9	ந்யாஸாதிகாரஸர்வஸ்வம் (தமிழ்)	0	8
10	ஸ்ரீ ஸித்தித்ரயம்-வ்யாக்யானத்துடன்	2	0

[நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழி பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த வ்யாக்யானங்களை அனுஸரித்து எளிய தமிழ்நடையில் திவான்பஹதூர் V.K. இராமானுஜாசாரியரால் எழுதப்பட்ட உரையுடன்]

பத்துப் பத்துக்கள் சேர்ந்து அவதாரிகை
அனுபந்தம் சேர்த்து 12ஸஞ்சிகைகளின் விலை 6 0

ஸம்ப்ரக்ஷிணி சந்தாதார்களுக்கு குறைந்த விலை ரூ. 4 0
கொஞ்ச காப்பிகள்தான் இருக்கிறது.

ப்ரசுரித்தது:-பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியர், தில்லஸ்தானம், B.O
(via) திருவையாறு.
அச்சிட்டது:- S. விஜயராகன், ஸ்ரீநிவாஸ பிரஸ், திருவையாறு.